மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
சிறுசேமிப்பு பிரிவு
27 ... 2022
சிவகங்கை.

சிவகங்கை மாவட்ட ஆட்சியரின் செயலாணைகள்
பிறப்பிப்பவர் : திரு.ப.மதுசூதன்ரெட்டி, இ.ஆ.ப.,

ந.க.ப்பி3/15143/ 2018

நாள்: 12.01.2022

பொருள் : பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணி நியமனம் - சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - மேலூர் ஊராட்சி ஒன்றியம் - பணியில் இருக்கும் போது காலமான கீழையூர் ஊராட்சி செயலர் திரு.எம்.கே.பாலமுருகன் என்பவரின் மனைவி திருமதி.பா.சுகந்தி - இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

படிக்கப் பட்டவை :

1. அரசாணை (நிலை) எண்: 18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள்: 23.01.2020.
2. சென்னை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.5279/2018/டி1, நாள்: 02.08.2018.
3. சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.ப்பி3/15143/2018, நாள்:14.08.2018.
4. சென்னை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.41759/2019/டி3, நாள்: 14.09.2020.
5. அரசாணை (நிலை) எண்: 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள்: 26.02.2021.
6. சென்னை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.18355/2021/டி2, நாள்: 18.12.2021.

*****

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், மேலூர் ஊராட்சி ஒன்றியம், கீழையூர் ஊராட்சியில், ஊராட்சி செயலராகப் பணிபுரிந்து 24.09.2016 அன்று பணியிடைக் காலமான திரு.எம்.கே.பாலமுருகன் என்பவரின் மனைவி திருமதி.பா.சுகந்தி, என்பவருக்கு மேலே படிக்கப்பட்ட இரண்டாவதாக காணும் கடிததத்தின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கிட கோரிய தனியரின் விண்ணபத்தினை சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு மாறுதல் செய்திட அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இம்மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், மேலே படிக்கப்பட்ட மூன்றாவதாக காணும் செயல்முறையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, 15.08.2018 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், தனியரின் பணியை வரன்முறைசெய்து சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின்ஒருநிலைகூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் அவரவர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டுமென படிக்கப்பட்ட 5-ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து படிக்கப்பட்ட 6-ல் காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கருணை அடிப்படையில்